# சக்கரநாற்காலியே எனது பாதங்கள்

*இது ஒரு இருமொழி படக்கதைப் புத்தகம்*

ஜெர்மனில் - ஃப்ரான்ஸ் ஜோஸஃப் ஹூஜநிக்
ஆங்கிலத்தில் - ரேகா காமத்
தமிழில் - உத்ரா துரைராஜன் & வெண்ணிலா ராஜா


**படங்கள் - அன்னேக்ரட் ரிட்டர்**
**மீண்டும் வரைந்தவர் - அவினாஷ் தேஷ்பாண்டே**

(R.Vennila, B.Sc. Physics (2015-17), Dwaraka Doss Goverdhan Doss Vaishnav College, Chennai, India)

# MY FEET ARE THE WHEEL - CHAIR


Author : Franz-Joseph Huainigg
Illustrator : Annegret Ritter
Redrawn by : Avinash Deshpande
English translation : Dr. Rekha Kamath
Tamil translation : Uthra Dorairajan &
Vennila Raja

மார்கித் ஒரு சின்னப் பெண். அவளால் நடக்க இயலாது. சக்கர நாற்காலியே அவளது பாதங்கள். மார்கித் சுதந்திரமானவள், குதுகலம் மிக்கவள். அவள் பல்பொருள் அங்காடிக்குச் செல்லும்போது சில சோகமான அனுபவங்களையும், சில உற்சாகமான விஷயங்களையும் எதிர்கொள்கிறாள். மற்றவர்கள் அவளை பாவமாக பரிதாபமாக பார்ப்பது அவளுக்குப் பிடிக்கவில்லை. மற்ற குழந்தைகளைப்போலவே இவளுடனும் இயல்பாகப் பழகவேண்டும் என்று ஆசைப்படுகிறாள். கடைசியில் அவளுக்கு ஒரு நண்பன் கிடைக்கிறான், அவனால் மகிழ்ச்சி கிடைக்கிறது.




Margit is a little girl. She is unable to walk. Her feet are the wheel-chair.
Margit is an independent and high spirited girl.
She visits a super market where she has some sad and some joyous encounters.
She doesn't like being pitied. She wants to be treated like other children.
In the end she finds a friend which makes her feel wanted and happy.

மார்கித் தினமும் காலை 7மணிக்கு விழிப்பாள். தூக்கத்தோடு படுக்கையில் அமர்வாள். பிறகு அவள் தயாராகத் தொடங்குவாள். காலணியை அணிய சிரமப்படுவாள். அவளது கைவிரல்களால் பாதங்களைத் தொடுவது அவளுக்கு அரிது. தினமும் 8மணிக்கு மார்கித் தயாராகி விடுவாள். அவளது கால்களை படுக்கையிலிருந்து கட்டிலின் மூலைக்கு நகர்த்தி நகர்த்தி எழுந்து வருவாள்.




Margit wakes up every morning at seven o'clock.
Sleepily she sits up in bed. Then she begins to get dressed.
She finds it difficult to slip into her shoes.
Her fingers can barely reach her toes.
Every morning at eight Margit is dressed and ready.
Then she holds her legs and pulls them over the edge of the bed.

காலை உணவு தயாராக மேசையில் இருக்கிறது. ‘‘அம்மா, ஜாம் எடுத்துவர முடியுமா?’’ என்று கேட்டாள் மார்கித். ‘‘அது அலமாறியில் உள்ளது’’ என்ற பதில் வந்தது. மார்கித் தானே அதை எடுத்துக்கொண்டாள். யாரையும் சங்கடப்படுத்தாதது சந்தோஷம் தந்தது. ‘‘எனக்காக மார்க்கெட் போவியா?’’ என்று கேட்டாள் அம்மா. ‘‘கட்டாயம்’’, உடனே சொன்னாள். முதல்முறையாக தனியாகச் செல்லப்போகிறாள். ‘‘ஏன்னல்லாம் வாங்கணும்மா?’’. ‘‘ஒரு லிட்டர் பால், 6 ஆப்பிள்கள். பார்த்து பத்திரமா போவியா செல்லம்?’’ ‘‘கவலை படாதீங்கம்மா’’. மார்கித் பெருமையுடன், முகம்மலர பொருட்களை வாங்கக் கிளம்பினாள்.



Breakfast is already on the table.
"Mummy, can you bring me the jam?" asks Margit.
"It's in the cupboard," comes the answer from the living room.
Margit gets the jam herself. She is happy not to have someone waiting on her.
"Will you go shopping for me ?" asks her mother.
"I'd love to," says Margit readily.
It is the first time that she is being allowed to go to the supermarket alone.
"What all should I bring ?" she asks excitedly.
"A litre of milk and six apples. Will you be able to manage it on your own ?"
"Certainly," smiles Margit and goes off proudly to do the shopping.

அவள், தெருக்களின் சந்தடியை மிகவும் விரும்பினாள். விடுமுறை நாட்கள். குழந்தைகள் தெருக்களில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். மார்கித் நின்றாள். வேடிக்கை பார்த்தாள். அவர்கள் ஸ்கிப்பிங் குதித்தும், பந்து விளையாடியும், ஓடிபிடித்தும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். கொஞ்சம் வருத்தமாக இருந்தது அவளுக்கு. அவளும் அவர்களுடன் விளையாட மிகவும் ஆசைப்பட்டாள்.



Margit likes the life on the street.
It's holiday time and children are playing everywhere.
Margit stops and watches them skip, play ball and catch-catch.
She is a little sad. She would have loved to play with them.

அங்கே, மைதானத்திலிருந்து அழைத்துக் கொண்டுபோக ஒரு குட்டிப்பெண்ணோட அம்மா வந்தார். ஆட! அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் அப்படி பார்த்தார்கள்!!

கூட்டமாக சிறுவர்கள் சிலர் ஒரு பையனை கேலி செய்துகொண்டிருந்ததைக் கண்டாள் மார்கித். ச்சீ, மோசம்! அவர்கள், அவனை “சிவப்புமுடி பையா, நெருப்பு பேய் பையா...” என கேலி செய்தனர். அந்தப் பையன் பார்ப்பதற்கு மற்ற குழந்தைகளைப்போல இல்லை என்பதாலேயே இப்படி கிண்டல்.




At the playground she sees a girl whose mother has just come to fetch her.
They look at each other curiously.
Then Margit sees a group of children teasing a boy. She finds it mean.
“Red-head, fire-devil . . . . !” they shout after him.
Just because he doesn’t look like the other children.

சிலர் மார்கித்தை வாழ்த்தினார்கள், அவர்களை அவளுக்கு தெரியாது என்றபோதும்! முதலில் மகிழ்ச்சியாக இருந்தாலும், “இவர்கள் எல்லாரும் ஏன் என்னை இப்படி பார்க்கிறார்கள்?” என்று வியந்தாள். அதுவும் கஃபேயில் இருப்பவர் ஏன் இப்படிப் பார்க்கிறார். மூன்றாவது முறையாய் அவள் திரும்பிப் பார்த்தபோதும்கூட அவளையே முறைத்துக்கொண்டிருந்தார்.



Many people greet Margit, although she dosen't know them.
At first she is pleased about it, but then she wonders,
"Why is everyone looking at me like that ?"
Especially the man in the cafe.
Even when she turns around a third time, he is still staring.

மார்கித் செய்தித்தாள்கடை முன் நின்றாள். அங்கிருந்த குண்டு விற்பனைப் பெண்ணிமணியிடம் வணக்கம் கூறினாள் மார்கித். “அடக்கடவுளே!”, அந்தப்பெண் அலரினாள். “இவ்வளவு பெரிய தண்டனையா? அதுவும் இந்தச் சிறுவயதில்!” அவமானத்தினால் மார்கித் அங்கிருந்து சடசடவென விலகினாள்.



Margit stops for a while at the newspaper stand.
She greets the fat sales-lady.
“Oh my god,” she cries.
“What a punishment, and so young too!”
Embarrassed, Margit goes away as quickly as she can.

மைதானத்தில் பார்த்திருந்த சிறுமியை மீண்டும் இங்கே துணிக்கடை முன்னே பார்த்தாள் மார்கித். அவளுடைய அம்மா துணிகளை நோட்டமிட்டுக் கொண்டிருந்தாள். ''ஹை.. இது என்னது?'' என்று சிறுமி மார்கித்தைக் கேட்டாள். ''அது வந்து....'' என்று தொடங்க ஆரம்பித்தாள் மார்கித். ஆனால் ஆனாவை அவளுடைய அம்மா கோபத்தோடு பின்னால் இழுத்தாள். ''இந்த மாதிரியான கேள்விளை கேட்கக்ககூடாது, ஆனா! என் மானம் போச்சு உன்னால''.

''நான் மற்ற குழந்தைகளிருந்து வித்தியாசமானவள் இல்லை'', என்று தனக்குள்ளேயே சோகத்துடன் சொல்லிக்கொண்டாள் மார்கித். ஆனாவின் அம்மா கூறியது அவளுக்குப் புரியவில்லை.




Margit sees the young girl from the playground again,
in front of a clothes store.
Her mother is looking at the clothes.
"What is this funny thing you have here," the girl asks Margit.
"That's only a ....," Margit begins to reply.
But her mother pushes Anna angrily aside.
"You shouldn't ask such questions, Anna ! You really embarrass me."
"I am no different from the other children," Margit says sadly to herself.
She doesn't understand Anna's mother.

வயதான ஒரு தாத்தா பாட்டி கடற்கரையில் சூரியனின் இதமான வெயிலில் நேரத்தை கழித்துக் கொண்டிருந்தனர். “ஐயோ பாவம்” என்று கூறி பாட்டி கொஞ்சம் பணத்தை மார்கித் கையில் போட்டாள். “நான் மற்ற பிள்ளைகளை போல்தான் இருக்கிறேன்” என்று மார்கித் கூற விரும்பினாள். ஆனால்....




An old man and an old woman are sunning themselves on the bench.
“Because you are a poor thing,” says the woman and she puts some money into Margit’s hand.
“I am as rich and as poor as the other children,” Margit wants to tell the woman.
But . . .

தாத்தா, “உனக்கு என்னம்மா ஆச்சு?” என்றார் பரிதாபப்பட்டு. மார்கித் கோபத்தில் சிவந்தாள்! “எல்லோருக்கும் என்னதான் வேண்டும்?” முதல்முறையாக இன்றுதான் பொருட்களை வாங்க தனியாகச் செல்கிறேன். “நான் மற்ற குழந்தைகளிருந்து வித்தியாசமானவள் இல்லை”, என்று கூச்சலிட்டாள். தாத்தா பாட்டியின் செயல் அவளுக்குப் புரியவில்லை.




. . . the old man takes pity and asks Margit, “What happened to you ?”
Margit turns red with anger.
“What do they all want from me ? “ Just today, when I have been allowed to go shopping the first time all by myself.
“I’m no different from other children,” she shouts.
She fails to understand the old man and the woman.

ஒருவழியாக மார்கித் பல்பொருள் அங்காடியை அடைந்தாள். நுழைவு வாசலில், தன்னால் தனியாக படியைத் தாண்டமுடியாது என்பதை உணர்ந்தாள். அவளுக்கு யாரும் உதவவில்லை. அனைவரும் அவர்அவர்பாட்டுக்கு ஓடிக்கொண்டிருந்தார்கள். யாருமே அவள் தேவையை பொருட்படுத்தவில்லை. ‘‘சிவப்புமுடி’’ என்று மற்றவர்களால் கிண்டல் செய்யப்பட்ட அந்தப் பையன் திடீரென்று மார்கித் முன்னால் வந்தான். அவன் மார்கித்தை பின்தொடர்ந்து வந்திருக்கிறான். ‘‘ஹலோ! நான் சிகி’’ என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டான். ‘‘நான் உதவட்டுமா?’’ என்று கேட்டான். ‘‘என் பெயர் மார்கித்’’. நிம்மதியோடு புன்னகைத்தாள் அவள். ‘‘பின்னால் இருக்கும் மிதிபெடல்மேல் கால் வையேன்’’ என்று சொன்னாள். மார்கித் சொல்படி சக்கர நாற்காலியை பின்னால் சாய்த்தான் சிகி. முன்சக்கரங்களை படிமேல் வைத்தான். பிறகு பின்சக்கரங்களையும் படியைத் தாண்டவைத்தான். ‘‘நன்றி!’’ என்று சிகியிடம் கூறிச்சென்றாள்.




Finally Margit reaches the supermarket. At the entrance she notices that she cannot manage the step alone. No one helps her. Everyone is in a hurry.
No one pays any attention to her.
Suddenly the boy, who was being teased "red-head" is standing before her.
He had been following her.
"Hello, I am Sigi," he introduces himself "Can I help you ?" "My name is Margit," she smiles in relief. "Please step on the pedal at the back," she begins to explain. Sigi tilts the wheel-chair up according to Margit's instructions and raises the front wheels over the step. Then he raises the back wheels over the hurdle. "Thank you," she calls out to Sigi.

பால் இருக்கும் இடத்தை பட்டென கண்டறிந்தாள். அவள் பாலை எடுக்கப்பார்க்கும்போது யாரோ சட்டென்று அதை அவளுக்கு எடுத்துக்கொடுத்தார். “ஏன் நானே எடுத்துப்பேனே?” அவள் வியந்தாள். பழம் வைக்கப்பட்டிருந்த அலமாரியைக் கண்டாள். ஆப்பிள் எடுக்கச் சென்றபோது விற்பனைப்பெண் அவளிடம் அதை எடுத்துக்கொடுத்தாள். விற்பனைப்பெண் புன்னகைத்தாள். “மற்றவர்களைப்போல் ஆப்பிள்களை நானே எடுத்துக்கமாட்டேன்?”, கோபத்துடன் சக்கர வண்டியில் ஆப்பிள்களை போட்டாள். மார்கித்துக்கு விற்பனைப்பெண்ணின் செயல் புரியவில்லை.




She soon finds the milk and is reaching out for it. Suddenly someone hands it to her. The salesman smiles.
“Can’t I take the milk on my own?” she wonders.
She finds the fruit stand and is just reaching out for a bag of apples, when it is handed to her. The salesgirl smiles.
Margit drops the apples angrily onto the wheelchair.
“Can’t I take the apples myself, like the others,” she calls out.
She doesn’t understand the sales girl.

மார்கித் சாக்லெட் பிஸ்கெட் அலமாரிகளுக்கு இடையே அமர்ந்து அழ ஆரம்பித்துவிட்டாள். ‘‘கவலைப்படாதே’’ என்று குரல் கேட்டது. அது சிகி! ‘‘மக்கள் என்னை ஏதோ ஒரு வினோதமான உயிரினம் போல நடத்துக்கிறார்கள்.’’ என்றாள் மார்கித். ‘‘எல்லாம் இந்த சக்கரவண்டியால் தான்’’, சிகி கூறினான். ‘‘ஆனா, இதுல அப்படி ஒன்னும் பெருசா இல்லையே. நான் பிறந்ததிலிருந்தே ஊனம்தான்’’ என்றாள் மார்கித். ‘‘ஊனம்னா என்ன?’’ கேட்டான் சிகி. ‘‘என் கால்களை என்னால் நகர்த்த முடியாது. சக்கர நாற்காலியே எனது பாதங்கள். ஆனாலும் நான் மற்ற குழந்தைகளிருந்து வித்தியாசமானவள் இல்லை’’. தலையை அசைத்த சிகி, ‘‘நீ வித்தியாசமானவள் தான்’’ என்றான். ‘‘இல்லை! நீயும் நானும் மத்தவங்களைப் போலதான் இருக்கோம்!’’ என்றாள் மார்கித். மறுபடியும் தலை அசைத்த சிகி, ‘‘நீ சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறாய். எனக்கு சிவப்பு முடி. நீயும் நானும் ஒரு விதத்தில் விசேஷமானவர்கள்’’. மார்கித்திற்கு ஒன்றும் புரியவில்லை. சிகி அவளை அழைத்துச் சென்றான்.




Margit sits between the shelves with chocolates and biscuits and cries.
"Don't be so sad," says someone suddenly. It is Sigi.
"People behave as if I am some strange creature."
"That's because of your wheel-chair," says Sigi.
"But there is nothing special about that," says Margit "I am lame since birth." "What is lame," asks Sigi.
"I can't move my legs. My feet are the wheel-chair. But I am still no different from the other children."
Sigi shakes his head," You are different."
"No ! You and I, we are like the others ! " says Margit.
Sigi again shakes his head, "You sit in a wheel-chair. I have red-hair. You and I have something special."
Margit doesn't understand him. Sigi takes her by the hand and pulls her with him.

அவர்கள் வெளியே செல்லும் வழியில் நின்றார்கள். “உன்னால் பல வேலைகளை தனியாக செய்யமுடியும். ஆனால் சில நேரங்களில் உதவி தேவைப்படும். எல்லாரையும் போலத்தான்” என்றான் சிகி. “படியைத் தாண்ட யாரையாவது உதவி கேள்”. மார்கித் மனஉறுதி கொண்டாள். வேகமாக சென்றுகொண்டிருந்த ஒருவரிடம் உதவி கேட்டாள். அவர் முகம் வாடியது. “ஐயோ!..நான் உன்னைப் பார்க்கவில்லை....தெரியவில்லை....எப்படி”, திகைத்த அவர் உதவினார். சிகியும் மார்கித்தும் கண்ணடித்துக் கொண்டார்கள்.




They stop at the exit. “You can do a lot of things on your own.
But sometimes you need help. Like everyone else,” says Sigi.
“Ask someone to help you over the step.”
Margit gathers up courage. She asks a man passing by in a hurry.
The man turns red. “ I didn’t see you, . . . didn’t know. . . and how,”
he stammers and helps.
Sigi and Margit wink at each other.

தாத்தா பாட்டி இருவரும் இன்னும் அந்தக் கடற்கரையிலேயே அமர்ந்திருந்தனர். மார்கித் அந்தப் பாட்டியின் தோள்களைத் தட்டி, "ஐயோ பாவம் பாட்டி நீங்க!", என்று கூறிவிட்டு லாலிபாப்பை பாட்டியின் கையில் கொடுத்தாள். "இது உங்களுக்கு", என்றாள். பாட்டிக்கு ஒரே அதிர்ச்சி! பாட்டி அப்படியே முழித்தாள்!! "எனக்கு என்ன ஆச்சுன்னு தெரிஞ்சுக்கணுமா தாத்தா?" மார்கித் கேட்டாள். "எனக்கு ஒரு நண்பன் கிடச்சிட்டான், அதனால நான் மகிழ்ச்சியா இருக்கேன்...." என்று சிரித்தாள். "மிகவும் வித்தியாசமானவன், விசேஷமானவன்!" என்றான் சிகி. மார்கித்தும் சிகியும் சுத்திச்சுத்தி வந்தார்கள். தாத்தா பாட்டிக்கோ தலை சுத்தியது.



The old man and the old woman are still sitting on the bench.
Margit taps the woman on the arm. "We feel sorry for you too,"
she says and puts a lollipop into her hand, " this is for you."
The old woman is shocked. She gapes at Margit.
"You wanted to know what happened to me?" Margit asks the man.
"I've found a friend and I'm happy . . . ," she laughs. "Someone special," adds Sigi.
Both Margit and Sigi turn around and around
until the old man and the old woman start feeling dizzy.

சாலையை கடக்கும் இடத்தில் ஆனாவையும் அவள் அம்மாவையும் மறுபடியும் கண்டார்கள். இந்தமுறை ஆனா எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. கேள்விகள் கேட்கக்கூடாது என்று அவள் கற்றிருந்தாள். “ஹலோ”, என்று மார்கித் ஆனாவைக் கூப்பிட்டு, “நான் ஊனமுற்றவள்” என்றாள். ஆனாவின் அம்மா அதிர்ச்சியடைந்தாள். “அப்படின்னா என்ன?”, ஆனா கேட்டாள். “உதாரணத்துக்கு, நடக்க இயலாமபோவது” மார்கித் விளக்கினாள். “நாம நடக்க வேண்டாம், அப்படியே சொய்ய்ய்…யினு நகரலாம்” என்றான் சிகி.



At the zebra crossing they again meet Anna and her mother.
This time Anna doesn’t ask any questions.
She has learnt that one doesn’t.
“Hello,” Margit calls out to her “I am handicapped”.
Anna’s mother is horrified. “What does that mean, handicapped ?” asks Anna. “For example, not being able to walk,” explains Margit.
“We don’t need to walk, we can ride,” explains Sigi.


மார்கித்தின் சக்கரவண்டியின் பின்னால் சிகி ஏறிக்கொண்டான். அவர்கள் இருவரும் தெருவில் விர்...ரென சென்றார்கள். ஆனாவும் அவர்களோடு கூடவே ஓடினாள்.



Sigi gets onto the back of Margit's wheel-chair.
They both zoom down the street. Anna runs with them.

இந்த முறையும் மக்கள் பார்த்தார்கள். குறிப்பாக க.ஃ.பேயில் இருப்பவரும், செய்தித்தாள்கடை பெண்மணியும். ஆனால், மார்கித்தை இது இனியும் சங்கடப்படுத்தவில்லை.

**முற்றும்**



This time too, people stare.
Specially the man in the cafe and the fat woman selling newspapers.
But it doesn't bother Margit anymore.

**END**